GST NO: 33AACCJ7046E1ZU

GARMENT MANTRA

GARMENT MANTRA LIFESTYLE LIMITED

(CIN: L18101TZ2011PLC017586)

Date: 29.07.2026

To

BSE Limited
PhirozeJeejeebhoy Towers,
Dalal Street, Mumbai – 400001

BSE Scrip Code: 539216

Dear Sir/Madam,

Subject: Newspaper publications of extract of unaudited financial results (standalone and consolidated) for the quarter ended 30th June, 2026 under Regulation 47 (1) (b) of SEBI (Listing Obligation and Disclosures Requirement) Regulations, 2015.

Pursuant to the captioned Regulation 47 (1) (b) of SEBI (Listing Obligation and Disclosures Requirement) Regulations, 2015 please find attached the newspaper cutting of extract of unaudited financials results (standalone and consolidated) for the quarter ended 30th June, 2026 published on 28.07.2026 in Maalai Murasu and Business Standard.

Kindly take note of the same in your records

Thanking you,
Yours faithfully,
For Garment Mantra Lifestyle Limited

LAKSHM
I PRIYA

Digitally signed by LAKSHMI PRIYA
DN: c=IN, postalCode=641108, st=TAMIL NADU, street=818A,B MAZHILAGAM ,ARCHANA GARDEN 1ST CROSS ,COIMBATORE,INDIRA COLONY, KANUVAI ,641108, l=COIMBATORE, o=Personal, serialNumber=9ea7afaef124d4350e9c02684cc41d8298f0e911d1487215363595c59101211d, pseudonym=9d054eb43f664934a100dc82d85dfc79, 2.5.4.20=62377eedcaf526f69d2f0e65d1a97a422a4fa08944371fc07551a0f44b69c292, email=LAKSHMIPRIYA.MAHI@GMAIL.COM, cn=LAKSHMI PRIYA
Date: 2026.07.29 16:26:49 +05'30'

Lakshmi Priya.K
Company Secretary
Membership No: A36135

GARMENT MANTRA LIFESTYLE LIMITED TIRUPUR

டெங்கு நோய் பரவல்:

கோவை மருத்துவமனையில் 3 குழந்தைகள் சிகிச்சைக்கு அனுமதி!

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இயல்பு தணிக்கை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஆய்வு மேற்கொண்டார்.

கோவை மண்டல செக்கிங் இன்ஸ்பெக்டர்கள்

அரசு பஸ்கள் இயக்கத்தை முறையாக கண்காணிக்க உத்தரவு!

தேசிய அளவிலான போட்டியில்

கோவை கல்வி நிறுவனங்கள் அசத்தல்!

பண்ணாரி மாரியம்மன் கோயிலில்

நிலாவை கண்ணாடியில் பார்க்கும் விநோத பூஜை!

கோபி தனியார் வேலைவாய்ப்பு முகாமில்

பணி நியமன ஆணையினை பெற்றவர்கள் அரசுக்கு நன்றி!

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், கூடலூர் வனக்கோட்டத்திற்குட்பட்ட பழங்குடியினர்களுக்கு வன உரிமைகள் வழங்குவது தொடர்பான குழு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வன அலுவலர் (கூடலூர்) தேவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி உட்பட பலர் உள்ளனர்.

ஆர்ப்பாட்டம் நடத்திய வழக்கு:

பா.ஜ.க.வை சேர்ந்த 9 பேர் விடுதலை!

கோவை, ஜூலை 29–

கேரள மாநிலத்தில் கடந்த 29102021 அன்று உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அவமதிக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தை கண்டித்து, கோவை மாநகர் பா.ஜ.க. சார்பில் குனியமுத்தூர் பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக குனியமுத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, அப்போது பா.ஜ.க. மாவட்ட பொதுச்செயலாளராக இருந்தவரும், தற்போது கோவை மாநகர் மாவட்ட தலைவராக உள்ள ஜெ. ரமேஷ்குமார், குனியமுத்தூரை சேர்ந்த ஜெகதீஷ், அருண், ரமேஷ், விக்னேஷ், பிரசாந்த், கலைச்செல்வி, கணபதி மண்டல் மோகனா, செல்வபுரம் மண்டல் நாச்சிமுத்து ஆகிய 9 பேர் மீது வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு கோவை ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு எண் 7 நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்தது. இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் பா.ஜ.க.வை சேர்ந்த 9 பேர் சார்பில் வழக்கறிஞர்கள் ஆர்.சி. பால் கனகராஜ் மற்றும் பி.ஜே. அனிதா ஆகியோர் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கில் திறம்பட வாதாடியதன் அடிப்படையில், வழக்கை ரத்து செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், கோவை ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு எண் 7 நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில், மேற்கண்ட 9 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இதையடுத்து, வழக்கில் வெற்றி பெற்று வழக்கை ரத்து செய்ய உத்தரவு பெற்றுத் தந்த சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆர்.சி. பால் கனகராஜ், பி.ஜே. அனிதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், மாநில செயலாளர் ஏ. நந்தகுமார், மத்திய அரசு நோட்டரி பப்ளிக்காக பணியாற்றி வரும் கோவையை சேர்ந்த வழக்கறிஞர்கள் எம். கலைச்செல்வன், ஏ. ஜோசன், டி. மகாவிஷ்ணு ஆகியோருக்கும் கோவை மாநகர் மாவட்ட பா.ஜ.க. சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதாக ஜெ. ரமேஷ்குமார் கூறியுள்ளார்.

உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அவமதிக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தை கண்டித்து, கோவை மாநகர் பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்திய வழக்கில் 8 பேர் விடுதலையாகி வெளியே வந்தனர்.

ஏ.டி.சி. நிழற்குடைகளில்

தடையை மீறி ஒட்டப்படும் அரசியல் போஸ்டர்கள்!

ஊட்டி, ஜூலை, 29–

ஊட்டியில் உள்ள ஏடிசி நிழற்குடைகளில் தடையை மீறி போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளதால் அலங்கோலமாக காட்சியளிக்கிறது. ஊட்டி நகராட்சிக்குட்பட்ட பொது சுவர்கள் மற்றும் நிழற்குடைகள் போன்றவைகளில் அரசியல் மற்றும் தனியார் நிறுவன போஸ்டர்கள் ஒட்டக் ... கட்சியினரின் போஸ்டர்கள் பல்வேறு சுவர்களிலும் காணப்படுகிறது.

IN THE COURT OF THE IN ADDTINAL SUBORIDANTE JUDGE OF COIMBATORE
OS No. 1088 of 2025
State Bank of India
SECC Branch
State Bank Road
Coimbatore-641018
Represented by its Chief Manager
... PLAINTIFF
Vs

Edited, and Published by S. N. Selvam on behalf of M/s. Chennai Murasu Private Ltd, from No. 292, Old No. 1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore – 641 006 and Printed by N.Durai Prakash at Kovai Malai Murasu Achagam, No. 292, Old No. 1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore – 641 006. RNI Registration No. TNTAM/2016/75063.

ஊட்டியில்

பேராசிரியைக்கு பாலியல் வன்கொடுமை!

உடற்கல்வி இயக்குநர் கைது!!

ஊட்டி, ஜூலை 29

கரூர் மாவட்டத்தை சேர்ந்தவர் குமரேசன் (33 வயது). இவர் கோவையில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் உடற்கல்வி இயக்குனராக பணியாற்றி வருகிறார்.

இவரும், அதே கல்லூரியில் பணியாற்றும் 30 வயது பேராசிரியையும் காதலித்து வந்துள்ளனர். அந்த பேராசிரியையை ஊட்டிக்கு இன்ப சுற்றுலா அழைத்துச் சென்ற குமரேசன் அங்கு தங்கும் விடுதியில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

இந்த நிலையில், குமரேசனுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடப்பதை அறிந்த பேராசிரியை அதுகுறித்து கேட்டுள்ளார். அப்போது அவர்கள் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் திருமணம் செய்ய முடியாது என குமரேசன் தரப்பில் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

இதனால் அதிர்ச்சியடைந்த பேராசிரியை கோவை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் இந்த வழக்கு ஊட்டி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாலியல் வன்கொடுமை மற்றும் எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டங்களின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார், உடற்கல்வி இயக்குனர் குமரேசனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

ஊட்டியை அடுத்த ஃபாரஸ்ட் கேட் பகுதியில் அங்கன்வாடி அமைத்துத் தர வலியுறுத்தி குழந்தைகளுடன் வந்த பெண்கள் ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

கோவை மாவட்டம் வால்பாறையில் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான உரிமைகள் முகாம் நடைபெற்றது. இதில் குட்டி என்ற சுதாகர் எம்.எல்.ஏ., நகர்மன்ற தலைவர் அழகு சுந்தரவல்லி செல்வம், நகராட்சி துப்புரவு அலுவலர் செந்தில்குமார், துப்புரவு ஆய்வாளர் சுரேந்தர், துணை வட்டாட்சியர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோபி அருகே

பெண் தற்கொலை!

கோபி, ஜூலை, 29–

கோபி அருகேநாதிபாளையம், மாரியம்மன் கோயில் வீதியைச் சேர்ந்தவர் சந்தோஷ் (26). இவரது மனைவி சுபா நந்தினி (23). இவர்கள் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு 5 வயதில் ஒரு மகனும், 3 வயதில் ஒரு மகளும் உள்ளனர். இந்தநிலையில், சந்தோஷ் போதைக்கு அடிமையானதால், கடந்த சில மாதங்களாக வேலைக்குச் செல்லாமலும், குடும்ப செலவிற்கு பணம் தராமலும் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இதனால், மனம் உடைந்த சுபா நந்தினி நேற்று வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். சுபா நந்தினிக்கு திருமணமாகி 5 ஆண்டுகளே ஆவதால் கோபி டி.எஸ்.பி. சீனிவாசன், ஆர்.டி.ஓ. சிந்துஜா ஆகியோர் விசாரித்து வருகிறார்கள்.

கல்லூரி மாணவி பாலியல் பலாத்காரம்!

புதுமாப்பிள்ளை கைது!!

ஈரோடு, ஜூலை 29

இன்ஸ்டாகிராம் மூலமாக பழகி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த புதுமாப்பிள்ளையை போலீசார் கைது செய்தனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர்காடையாம்பட்டி ராஜமன்னார் கால னியை சேர்ந்தவர் செந்தில்குமார். இவருடைய மகன் பிரதீப் (20). கூலித்தொழிலாளி. இன்ஸ்டாகிராம் சமூகவலைதளம் மூலமாக ஈரோடு மாவட்டம் பெருந்துறையை சேர்ந்த 17 வயது சிறுமியுடன் பழக்கம் ஏற்பட்டது.

அவர்கள் 2 பேரும் கடந்த 2 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். சிறுமி தற்போது கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் மாணவியை பிரதீப் ஈரோட்டுக்கு வர சொல்லி நேரில் சந்தித்து உள்ளார். பின்னர் வ.உ.சி. பூங்காவுக்கு அவர்கள் சென்றனர். அங்கு அவர்கள் மகிழ்ச்சியாக பேசிக் கொண்டு இருந்தனர். அப்போது திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறிய பிரதீப். அந்த மாணவியை பாலியல் பலாத்காரம் செய்து உள்ளார். இதையடுத்து மாணவியிடம் பிரதீப் பழகுவதை தவிர்த்து வந்தார்.

இந்த நிலையில், காதலனைப் பார்ப்பதற்காக மாணவி திடீரென பிரதீப்பின் வீட்டிற்கு சென்றார். அங்கு சென்ற மாணவிக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. பிரதீப்புக்கு ஏற்கனவே அதே பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் கடந்த மாதம் திருமணம் நடந்து முடிந்தது மாணவிக்கு தெரியவந்தது. தன்னை உருகி உருகி காதலித்துவிட்டு, தனக்கு தெரியாமல் வேறொரு பெண்ணை பிரதீப் திருமணம் செய்து ஏமாற்றியதை அறிந்து அந்த மாணவி நிலைகுலைந்து போனார்.

இதனால் பெரும் ஏமாற்றமும், மனவேதனையும் அடைந்த மாணவி, நேராக ஈரோடு அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்திற்குச் சென்று பிரதீப் மீது பரபரப்பு புகார் அளித்தார்.

புகாரின் பேரில், மகளிர் போலீசார் உடனடியாக வழக்குப் பதிவு செய்தனர். மைனர் சிறுமியை காதலித்து ஏமாற்றிய குற்றத்திற்காக, வாலிபர் பிரதீப் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதியப்பட்டது. இதையடுத்து, பிரதீப்பை போலீசார் நேற்று அதிரடியாக கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இன்ஸ்டாகிராம் காதலால் கல்லூரி மாணவி ஏமாற்றப்பட்டு, வாலிபர் போக்சோவில் கைதான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கோபி அருகே

லாரி மோதி மின்கம்பம் சேதம்!

கோபி, ஜூலை, 29–

கோபி அருகே அவ்வையார்பாளையத்தில் கரும்பு பாரம் ஏற்றி வந்த லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. லாரியில் அளவுக்கு அதிகமான கரும்பு பாரம் ஏற்றி வந்ததால், எதிர்பாராத விதமாக லாரி மின்கம்பியில் உரசியது. அப்போது கரும்புக்குள் மின்வயர்கள் சிக்கிக் கொண்டதால், லாரியின் வேகத்தில் மின்கம்பங்கள் உடைந்து சேதமடைந்துள்ளது. இதனால் அந்தப்பகுதியில் மின்இணைப்பு துண்டிக் கப்பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது. மேலும், மின்கம்பங்கள் தொடர்ந்து கீழே விழாமல் இருக்க ஏணியை தாங்கலாக மின்கம்பத்தின் அருகில் நிறுத்தி வைத்திருந்தனர். அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர்.

கோபி அருகே கருக்கம்பாளியில் உள்ள பழைய பிளாஸ்டிக் கழிவுகளில் ஏற்பட்ட தீயை தீயணைப்புத் துறையினர் அணைத்தனர்.

மேட்டூர் அருகே

சரக்கு வாகனம்-லாரி விபத்தில் டிரைவர் பலி!

20 பேர் காயம்!!

மேச்சேரி, ஜூலை.29–

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே மேச்சேரியில் நடைபெற்ற கோர சாலை விபத்தில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த லாரி, மேட்டூரில் இருந்து கரூர் நோக்கி சென்ற தமிழக அரசு பேருந்தை பிக்கப் சரக்கு வாகனம் முந்தி செல்ல முற்பட்ட போது எதிரே வந்த ஆந்திர மாநில லாரியுடன் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அப்பளம் போல் பிக்கப் சரக்கு வாகன ஓட்டுநர் வாகனத்தில் சிக்கி உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த நிலையில், தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் காவல்துறையினர் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், அரசு பேருந்தில் பயணம் செய்த பயணிகள் உட்பட 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர், ஓமலூர் அரசு மருத்துவமனைகள் மற்றும் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைகளுக்கு முதலுதவி மற்றும் மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த விபத்தால் மேட்டூர்–சேலம் தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதனால் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகினர். சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காங்கயம் நகராட்சி சார்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கோயம்புத்தூர் மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
O. S. NO. 148 OF 2025
1) துளசி ராவ்,
மற்றும் 13 நபர்கள்,
1 முதல் 14 நபர்களுக்காக
அவர்களின் பொது அதிகார முகவர்,
திரு. ரவீந்த்ரநாத்,
...வாதிகள்
எதிர்
1) R. கணேசன்,
த/பெ. M. V. ராமமூர்த்தி,
க. எண். 71, வெங்கடகிருஷ்ணா ரோடு, R.S.புரம், கோயமுத்தூர்-02
2) K. சரவணன், வழக்கறிஞர்,
அலுவலக முகவரி, எண். 102,
பாலாஜி காம்ப்ளக்ஸ், முதல் தளம்,
கோபாலபுரம் முதல் வீதி,
கோயமுத்தூர்-18
...8 & 16ம் பிரதிவாதிகள்
8 & 16ம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு
மேற்படி வாதிகள், 29/12/2017, 03/02/2022 தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் 19/09/2024 தேதிய கிரைய ஒப்பந்தம் ஆகியவைகளை செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம், மற்றும் உங்களை மேற்படி தாவாவில் கட்சி சேர்க்கவும் உங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மேற்படி தாவாவில் நீங்கள் ஆஜராவதற்காக வரும் 24/08/2026 தேதிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதி காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நீங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகிவிடும் என்பதை அறியவும்.
M/s. UDAYA P. S. MENON & ASSOCIATES,
ADVOCATES, COIMBATORE -09

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், ஈரோடு
சி.ப.எண். 262/2026/அ2
விஜி, த/பெ. ராஜேந்திரன் லேட்
52/2, கேகே நகர்,
ரங்கம் பாளையம் அஞ்சல்,
ஈரோடு-638009
...மனுதாரர்
எதிர்
வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
ஈரோடு.
எதிர்மனுதாரர்
அறிவிப்பு
எனது தந்தை ராஜேந்திரன் த/பெ பழனியப்ப முதலியார் (லேட்) என்பவர் கடந்த 07.04.2009 அன்று H46, மாணிக்கம்பாளையம், வீரப்பன் சத்திரம் அஞ்சல், ஈரோடு என்ற முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரரின் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மேற்படி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் ஈரோட்டில் மனுதாக்கல் செய்துள்ளேன்.

மாண்புமிகு முதலாம் கூடுதல் சார்பு நீதிமன்றம் கோயம்புத்தூர்
அ.வ.எண். 672 OF 2025
அ/மி ராமலிங்க சௌடேஸ்வரி புதிய சௌடம்மன் தேவஸ்தானம்,
அதன் பிரதிநிதியாக நிர்வாக அறங்காவலர்,
கோயம்புத்தூர்
வாதி
எதிர்
எம்.நாராயணன், த/பெ.முத்துசாமி,
எண்.54, சின்னவேடம்பட்டி சந்து,
கோவை.
பிரதிவாதி
மேற்படி பிரதிவாதிக்கு அறிவிப்பு
மேற்படி வாதி தனக்கு வரவேண்டிய வாடகை நிலுவை தொகை ரூபாய் Rs.5,76,612/ தொகைக்காக மேதகு நீதிமன்றத்தில் உங்களுக்கு (பிரதிவாதி) எதிராக தாக்கல் செய்த வழக்கில் தங்களுடைய ஆஜருக்காக வருகிற ...

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், ஈரோடு
சி.ப.எண். 288/2026/அ1
செ.துரைராஜ்
த/பெ செங்கோட நாடார்,
3/41, நாடார் பெருமாபாளையம்,
பட்டக்காரன் பாளையம்,
சுள்ளிப்பாளையம் அஞ்சல்,
பெருந்துறை தாலுகா,
ஈரோடு -638057
...மனுதாரர்
எதிர்
வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
பெருந்துறை
எதிர்மனுதாரர்
அறிவிப்பு
எனது தாய் வழி (பாட்டி) பெருமாயி த/பெ கருப்பண நாடார் (லேட்) என்பவர் கடந்த 06.06.1992 அன்று 3/41, நாடார் பெருமாபாளையம், பட்டக்காரன் பாளையம், சுள்ளிப்பாளையம் அஞ்சல், பெருந்துறை தாலுகா, ஈரோடு என்ற முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரரின் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மேற்படி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் ஈரோட்டில் மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி எனது தாய் வழி (பாட்டி) பெருமாயி இறப்பை பதிவு செய்ய யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இன்றைய தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. அவ்வாறு ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்க தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாக அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்ற உத்தரவுப்படி//

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், ஈரோடு
சி.ப.எண். 289/2026/அ4
செ.துரைராஜ்
த/பெ செங்கோட நாடார்,
3/41, நாடார் பெருமாபாளையம்,
பட்டக்காரன் பாளையம்,
சுள்ளிப்பாளையம் அஞ்சல்,
பெருந்துறை தாலுகா,
ஈரோடு -638057
...மனுதாரர்
எதிர்
வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
மொடக்குறிச்சி.
எதிர்மனுதாரர்
அறிவிப்பு
எனது தந்தை சி. செங்கோடநாடார் த/பெ சின்னசாமி நாடார் என்கிற சின்னப்ப நாடார் (லேட்) என்பவர் கடந்த 27.05.1997 அன்று ஒடக்காட்டுவலசு, ஈஞ்சம்பள்ளி கிராமம், மொடக்குறிச்சி தாலுகா, ஈரோடு என்ற முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரரின் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மேற்படி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் ஈரோட்டில் மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி எனது தந்தை சி.செங்கோட நாடார் இறப்பை பதிவு செய்ய யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இன்றைய தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. அவ்வாறு ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்க தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாக அறியவும்.
//வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்ற உத்தரவுப்படி//

Precot
பிரிகாட் லிமிடெட்
CIN: L17111TZ1962PLC001183
பதிவு அலுவலகம்: SF எண்.559/4, D பிளாக், 4வது தளம், ஹனுதேவ் இன்ஃபோ பார்க், நவ இந்தியா ரோடு, உடையாம்பாளையம், கோயம்புத்தூர் – 641028, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி: 0422–4321100 மின்னஞ்சல்: secretary@precot.com, இணையதளம்: www.precot.com
64வது வருடாந்திர பொதுக் கூட்டம், தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் புத்தகம் மூடல் குறித்த அறிவிப்பு

கார்மெண்ட் மந்த்ரா லைப்ஸ்டைல் லிமிடெட்
30.06.2026-ல் முடிந்த காலாண்டிற்கான
தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கை